
https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

04th AUGUST 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 91



# 100 ற்றைக் கடந்துவிட்டார் ரணில்...!!!

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் எம்பிக்களின் எண்ணிக்கை 100ற்றைத் தாண்டிவிட்டது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் யாரென்ற விபரம் விரைவில் வெளிப்படுத்தப்படும் என்று அந்தத் தகவல் மேலும் கூறுகிறது.

ரணிலுக்கான எம்பிக்களின் ஆதரவைத் திரட்டும் பணியில் மும்முரமாக இறங்கியுள்ளது அரசு .மொட்டு எம்பிக்கள்,ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் என பல்வேறு கட்சிகளின் எம்பிக்களுடன் அரச தரப்பு பேச்சு நடத்தி வருகிறது.

02 ▶

## மொட்டு எம்பிக்கள் 20 பேருடன் ரணில் தரப்பு பேச்சு

ரணிலுக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மொட்டு கட்சி எம்பிக்கள் 20 பேருடன் அரச தரப்பு பேசுவதற்கு முடிவெடுத்துள்ளது என்று அறிய முடிகிறது.

இந்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் இந்த சந்திப்பை ஒழுங்குபடுத்தியுள்ளார் என்று அந்தத் தகவல் மேலும் கூறுகிறது.

## 40 லட்சம் வாக்குகள் மிதப்பு வாக்குகளாக

இந்த ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வாக்களிப்பதென்று முடிவெடுக்காத நிலையில் 40 லட்சம் வாக்குகள் மிதப்பு வாக்குகளாக உள்ளன என்று அரச உளவு பிரிவு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அரச புலனாய்வு அண்மையில் ரகசியமான முறையில் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று இந்த ஆய்வை நடத்தி இருந்தது.அதில் அவர்கள் தாம் யாருக்கு வாக்களிப்பது என்று இன்னும் முடிவெடுக்கவில்லை என்றும் இறுதி நேரத்தில்தான் முடிவெடுப்போம் என்றும் கூறி இருந்தனர்.

பொருளாதாரத்தை முனேற்றக்கூடியவர் – திருடாதவர் யாரென்று அலசி ஆராய்ந்து பார்த்தே இறுதி முடிவெடுப்போம் என்று அவர்களுள் அதிகமானவர்கள் கூறியுள்ளனர்.

## மொட்டின் வேட்பாளர் தமிக்க: 7ஆம் திகதி அறிவிப்பு



மொட்டு கட்சியின் வேட்பாளர் தமிக்க பெரேராதான் என்றும் 7ஆம் திகதி இது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் மொட்டு கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஏழாம் திகதி மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் கொழும்பில் நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.அந்த நிகழ்வின்போதே இந்த அறிவிப்பு வெளியாகும் என்று தெறிக்கப்பட்டுள்ளது.



புது சுடர்
www.puthusudar.lk
2024 AUGUST 04 - SUNDAY

# இஸ்ரேலை தாக்குமா ஈரான்?

ஹமாஸின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியா ஈரானில் வைத்து கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இஸ்ரேல் மீது கடும் கோபத்தில் உள்ளது ஈரான் .தமது நாட்டுக்குள்ளேயே வைத்து தாக்குதல் நடத்தியமையானது ஈரானுக்கு பெருத்த அவமானமாகப் போய்விட்டது.

தனது விருந்தாளியைக்கூட பாதுகாக்க முடியவில்லை.ஈரானுக்கு உள்ளேயே பாதுகாப்பில்லை. என்றெல்லாம் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் சேர்த்து இஸ்ரேலை பழிவாங்கப் போவதாகவும் இஸ்ரேலை அழிக்கப்போவதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.அதுவும் 72 மணி நேரத்துக்குள் தாக்குதல் நடத்தப்படும் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை,40 போர் கப்பல்களை தாங்கிய கப்பல் ஒன்றை அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது.அந்தக் கப்பல் இப்போது ஈரானுக்கு அருகில் ஹொர்முஸ் பகுதியில் தரித்து நிற்கிறது.

ஈரான் இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தினால் ஈரானைத் தாக்குவதற்காகவே அந்தக் கப்பல் வந்துள்ளது என்று சொல்லப்படுகிறது.இல்லை ஈரானை எச்சரிப்பதற்காகவே வந்துள்ளது என்று சர்வதேச நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால்,உண்மையில் அந்தப் போர் கப்பல் ஈரானுக்கு அச்சுறுத்தல் கிடையாது.அந்தக் கப்பலைத் தாக்குவது ஈரானுக்கு கஷ்டமான காரியமல்ல.கப்பலை தாக்கி அழித்துவிட்டால் அந்தக் கப்பலில் உள்ள போர் விமானங்களால் எதுவும் செய்ய முடியாது.கப்பலுடன் சேர்ந்து விமானங்களும் மூழ்க வேண்டியதுதான்.

அப்படி இல்லாவிட்டால் அந்த விமானங்களுக்கு அருகில் உள்ள முஸ்லிம் நாடுகள் இடம் கொடுக்க வேண்டும்.அப்படிக் கொடுத்தால் அந்த நாடுகள்மீது ஈரான் தாக்குதல் நடத்தும். அதனால் அதுவும் சாத்தியமில்லை என்கிறார்கள் நிபுணர்கள்.

ஆகவே,அந்தக் கப்பல் வந்து எந்தப் பயனுமில்லை.அதுபோக,இவ்வாறு வந்த பல கப்பல்களை ஹூதிகள் அண்மைக்காலமாக அழித்திருப்பதை நாம் அறிவோம்.

இப்படியானதொரு நிலையில்,இஸ்ரேல் மீது ஈரான் போர் தொடுத்தால் எப்படி இஸ்ரேலை காப்பாற்றுவது என்று யோசித்துக்கொண்டிருக்கிறது அமேரிக்கா.

இது இவ்வாறிருக்க ஹமாஸ் படையினரும் ஹிஸ்புல்லா போராளிகளும் தொடர்ச்சியாக இஸ்ரேலைத் தாக்கி வருகின்றனர். இஸ்ரேலின் முக்கிய தளங்கள். இராணுவத் தளங்கள்மீது கடும் தாக்குதல் நடத்தப்படுகிறது.

இந்தப் போர் இப்போது முடிவதற்கான சாத்தியமே இல்லை. தமது தலைவர் கொல்லப்பட்டதால் ஆத்திரமடைந்துள்ள ஹமாஸ் இஸ்ரேலை ஒரு கை பார்க்காமல் விடாது என்றே நம்பப்படுகிறது.

ஏற்கனவே இஸ்ரேலிய இராணுவம் விருப்பமே இல்லாமல் ஹமாஸ/க்கு எதிராக போர் செய்து வருகின்றனர். காஸாவுக்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவம் மீது ஹமாஸ் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.இஸ்ரேலிய படை கடும் சேதங்களை எதிர்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் ஹமாஸ் தமது தலைவரின் கொலைக்காக பழிவாங்கலை மேலும் தீவிரப்படுத்தினால் அதை இஸ்ரேலிய படையால் தாங்கிக்கொள்ள முடியாது.

ஈரானும் நேரடித் தாக்குதலைத் தொடுத்தால் இஸ்ரேல் கடும் நெருக்கடிக்குள் சிக்கும்.இந்த போரை நிறுத்துமாறு ஏற்கனவே இஸ்ரேலிய மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

நெதன்யாஹூவின் அரசு எல்லா பக்கத்திலும் நெருக்கடியைச் சந்தித்தும் கூட,போரை நிறுத்துவதாக இல்லை.இதனால் இஸ்ரேலிய மக்கள் அழிவைச் சந்தித்து வருகிறார்கள்.

ஈரான் தாக்குதலைத் தொடுத்தால் இஸ்ரேலின் தற்போதைய நிலைமை மேலும் சிக்கலை எதிர்கொள்வது நிச்சயம்.

தாக்குதலை நடத்துமா இல்லையா,... பொறுத்திருந்து பார்ப்போம்.

## தீர்மானம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**வடக்கு – கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் – கட்சிகளுடனும் பேச்சு நடத்தி வருகிறது.**

**இந்த நடவடிக்கையின் பயனாக பல எம்பிக்கள் ரணிலின் பக்கம் சாய்ந்துள்ளனர் என்றும் 100 எம்பிக்களுக்கு அதிகமானவர்கள் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**









# ஜனாதிபதி தேர்தலில் வென்றதும் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்படும்

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திசாநாயக்க. அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : நீங்கள் ஜனாதிபதி தேர்தலில் வென்றால் உங்களது முதல் பணி என்ன?**

பதில் : முதலில் 25 அமைச்சுக்கள் உருவாக்கப்படும்.அதை வர்த்தமானியில் அறிவித்துவிட்டு அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

எமது அமைச்சரவையில் 25 அமைச்சர்கள் மட்டுமே.இராஜாங்க அமைச்சர்கள் என்று எவருமே கிடையாது. அதனைத் தொடர்ந்து உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்படும்.

**கேள்வி : நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டாம்.உங்களுக்கு ஆதரவு தருகிறோம் என்று இப்போதுள்ள எம்பிக்கள் கூறினால் என்ன செய்வீர்கள் ?**

பதில் : முதலில் இந்த நாடாளுமன்றதுக்கு மக்கள் ஆணை உள்ளதா என்று பார்க்க வேண்டும்.ஜனாதிபதியாக இருப்பதற்கு ரணிலுக்கு இப்போது மக்கள் ஆணை இல்லை.எம்பிக்களாக இருப்பதற்கு மொட்டு எம்பிக்களுக்கு மக்கள் ஆணை இல்லை.

நாம் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் எமக்கு மக்கள் ஆணை உண்டு என்பது உறுதியாகும்.அந்த ஆணையின் அடிப்படையில் நாம் நாடாளுமன்றத்தைக் கலைப்போம்.

இப்போது இருக்கின்ற–மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள எம்பிக்களை வைத்து அரசொன்றை உருவாக்க முடியாது.அது மக்கள் ஆணைக்கு எதிரானது.

**கேள்வி : இந்தத் தேர்தலில் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்வதால் ஒரு வேட்பாளரால் 50 வீத வாக்குகளை பெற முடியுமா?**

பதில் : முடியும்.எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் ஜனாதிபதி தேர்தலை பொறுத்தவரை வாக்காளர்கள் இரண்டாகப் பிரிவார்கள்.இரண்டு வேட்பாளர்களுக்கு இடையில்தான் போட்டி நிலவும்.ஏனைய சிறிய வேட்பாளர்கள் போட்டி எல்லைக்குள் வரமாட்டார்கள்.

அந்த அடிப்படையில்,இந்த முறை தேர்தலில் ரணிலுக்கு எமக்கும் இடையில் போட்டி நிலவும்.அல்லது எமக்கும் சஜித்துக்கும் இடையில் போட்டி நிலவும்.

எப்படி இருப்பினும்,போட்டியில் எல்லைக்குள் இருக்கும் இரு கட்சிகளில் ஒன்றாக நாம் இருக்கப்போவது நிச்சயம். நாம் 50 வீதத்தை தாண்டிய வாக்குகளை பெறுவோம்.

**கேள்வி : உண்மையில் இந்தத் தேர்தலில் உங்களுக்கு போட்டி யார்?**

பதில் : அதை இப்போது சொல்ல முடியாது.அதற்கு இன்னும் நாட்கள் உண்டு.

**கேள்வி : ஜேவிபி நாட்டை ஆட்சி செய்வதற்கு போதுமான அனுபவம் இல்லை என்று ஏனைய கட்சிகள் கூறுகின்றனவே.**

பதில் : நியாயம்தான்.ஆனால்,இந்தக் கட்சிகள் அவர்களின் அனுபவத்தின் ஊடாக இந்த நாட்டுக்குப் பெற்றுத் தந்த வெற்றி என்ன?அவர்களிடம் இருப்பது கொள்ளை அடிப்பது மற்றும் வீண் விரயம் செய்வது தொடர்பான அனுபவம்தான்.

அவர்கள் நாட்டை பொருளாதாரரீதியாகமுன்னேற்றவில்லை. சீரழித்துவிட்டார்கள்.

> இந்த முறை தேர்தலில் ரணிலுக்கும் எமக்கும் இடையில் போட்டி நிலவும். அல்லது எமக்கும் சஜித்துக்கும் இடையில் போட்டி நிலவும்.எப்படி இருப்பினும்,போட்டியின் எல்லைக்குள் இருக்கும் இரு கட்சிகளில் ஒன்றாக நாம் இருக்கப்போவது நிச்சயம்.நாம் 50 வீதத்தை தாண்டிய வாக்குகளை பெறுவோம்.

**கேள்வி : உங்களது ஆட்சியில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்படுமா ?**

பதில் : ஆம். ஒழிக்கப்படும்.நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு,இந்த முறைமையால் நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை.

இருக்கின்ற அரசியல் கலாசாரத்தை அப்படியே இழுத்துக்கொண்டு போவதல்ல எமது திட்டம்.பிழையான எல்லாவற்றையும் மாற்றுவதுதான் எமது திட்டம்.

**கேள்வி : உங்களுக்கும் அரசுக்கும் இடையில் ஒரு டீல் இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறதே ?**

பதில் : நாம் எதற்காக அரசுடன் டீல் வைக்க வேண்டும்.உண்மையில் டீல் வைத்திருப்பது அவர்கள்தான்.சில நாட்களுக்கு முன் அக்கட்சி எம்பிக்களுக்கும் ரணிலுக்கும் இடையில் ரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

அக்கட்சியில் தெரிவு செய்யப்பட சில எம்பிக்களுக்கு மாத்திரம் அபிவிருத்தி நிதி வழங்கினார் ரணில்.

ரணில் அவரது வெளிநாட்டு பயணத்துக்கு நிதி போதாது என்று 20 கோடி ரூபா நிதியை ஒதுக்கிக்கொண்டார்.அது அவருடன் ஐக்கிய மக்கள் எம்பிக்களை அழைத்துச் செல்வதற்காக.

வடிவேல் சுரேஷை நிவ்யோர்க் நகருக்கு அழைத்துச் சென்றார்.கிங்ஸ் நெல்சனை உகண்டாவுக்கு அழைத்துச் சென்றார்.அஜித் மாணப்பெருமவை துபாய்க்கு அழைத்துச் சென்றார். இசாக் ரஹுமானை இன்னொரு நாட்டுக்கு அழைத்துச் சென்றார்.

இன்னும் பல ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் சாராய பார் அனுமதிகூட பெற்றுள்ளார்கள்.இப்படி அவர்கள்தான் டீல் வைத்துள்ளார்கள்.

**கேள்வி : இனி தேர்தலை ஒத்திப்போடுவதற்கு ஜனாதிபதியால் முடியுமா?**

பதில் இல்லை..அவர் எங்களைபோல் ஒரு வேட்பாளர்.தேர்தல் ஆணைக்குழுவுக்குத்தான் எல்லா அதிகாரமும் உண்டு.இனி தேர்தல் நடந்தே தீரும்.

**கேள்வி : ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்டுள்ள 22 ஆவது திருத்த யோசனையை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்து தேர்தலை ஒத்திப்போட முடியுமா?**

பதில் : ஒருபோதும் இல்லை.அது நாடாளுமன்றத்துக்கு விவாதத்துக்குகூட வராது.ரணில் தேவையே இல்லாமல் மக்களை குழப்புகிறார்.அது அவரது பழக்கம்.அப்படிச் செய்வதன் மூலம் சந்தோஷமடையும் மனோநிலை கொண்டவர் அவர். இந்த சந்தர்ப்பத்தில் எவராவது இப்படியான சட்டமூலத்தைக் கொண்டு வருவார்களா?இந்தப் பிரச்சினையை நீதிமன்றம் மூன்று தடவைகள் தீர்த்து வைத்திருக்கிறது.அப்படி இருந்தும் இதைத் தூக்கிப் பிடிக்கிறார் ரணில்.–என்றார்.




# தண்டனை வேண்டும்

அவரவர் மதம் அவரவருக்கு உயிர். அதில் கைவைப்பது அவர்களின் உயிர்களில் கை வைப்பதற்கு சமம்.

அப்படியான ஒன்றுதான் கொரோனா காலத்தில் முஸ்லிம்களின் உடல்கள் கட்டாயமாக எரிக்கப்பட்டமை.

இஸ்லாத்தில் இறந்தவரின் உடல் அடக்கம் என்பது மிகவும் உணர்வுபூர்வமான-மார்க்கரீதியான ஒன்று. தகனம் என்ற கதைக்கே இடமில்லை.

24 மணி நேரத்துக்குள் அடக்க வேண்டும். மிகவும் எளிமையான முறையில் அந்த நல்லடக்கம் இருக்க வேண்டும் என்றெல்லாம் பல விதிமுறைகள் உள்ளன. நல்லடக்கத்துக்கு முஸ்லிம்கள் கொடுக்கும் மரியாதையே தனி.

அப்படியானதொரு நிலையில், அந்த உடலை எரிப்பதென்றால் அதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது. அது உயிரிழந்தவரை மீண்டும் கொல்வதற்குச் சமம்.

இந்த உணர்வுகளையெல்லாம் காலின் கீழ் போட்டு மிதித்து கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதற்கு உத்தரவிட்டார் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

புதைப்பதன் மூலம் நீரின் ஊடாக கொரோனா வைரஸ் பரவும் என்ற குருட்டுத்தனமான- அறிவியலுக்கு எதிரான வாதத்தை முன்வைத்தே இந்த அநியாயத்தைச் செய்தார் கோத்தா.

வைரஸ் நிபுணர்கள், உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்ட அனைவரும் கோரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை புதைக்க முடியும். அவ்வாறு புதைப்பதன்மூலம் நீரின் ஊடாக வைரஸ் பரவாது என்று அவர்கள் கூறியும்கூட அதையெல்லாம் கேட்கவில்லை கோத்தா.

உண்மை தெரிந்திருந்தும்கூட, முஸ்லிம்களை பழிவாங்குவதற்காக அவரது நிலைப்பாட்டில் உறுதியாக நின்றார்.

இறுதியாக, 2022 பெப்ரவரியில் அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி இம்ரான் கானின் தலையீடு காரணமாகவே கோத்தா அவரது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். நல்லடக்கத்துக்கு அனுமதி வழங்கினார். அதனைத் தொடர்ந்தே ஓட்டமாவடியில் அமைந்துள்ள நஜ்மா நகர் கொரோனா உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு என்று ஒதுக்கப்பட்டு அதன்பின் கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டன.

இந்த சம்பவம் நடந்து முடிந்து மூன்று வருடங்களின் பின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசு இந்தக் கட்டாயத் தகனத்துக்கு இப்போது மன்னிப்பு கேட்டுள்ளது. கோத்தா அரசால் முன்னெடுக்கப்பட்ட அந்த கட்டாயத் தகனம் ஒரு இனவாத செயற்பாடு என்பதையும் பேரினவாதிகளை சந்தோசப்படுத்துவதற்காக செய்யப்பட அநியாயம் என்பதையும் இந்த மன்னிப்புக் கோரல் சுட்டிக்காட்டுகிறது.

மன்னிப்புக்கோரல் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அது கேட்கப்பட்ட சூழ்நிலைதான் சந்தேகத்தைக் கிளப்புகிறது. ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இந்த மன்னிப்பு கோரல் முன்வைக்கப் பட்டிருப்பதுதான் இந்த சந்தேகத்துக்கு காரணம்.

ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகளை பெறுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த வேலையை பார்த்துள்ளாரோ என்று எல்லோரும் சந்தேகிக்கிறார்கள்.

**ஜனாதிபதி பதவியை ஏற்று சில மாதங்களில் இந்த மன்னிப்புக் கோரலை விடுத்திருந்தால் இந்த சந்தேகம் வந்திருக்காது. முஸ்லிம்கள் அனைவரும் சந்தோசப்பட்டிருப் பார்கள். இருந்தாலும், இது நிராகரிக் கப்படக்கூடிய ஒன்றல்ல. கோத்தா முஸ்லிம்களுக்கு செய்த அநியாயத்தின் வரலாற்றுப் பதிவாக இருப்பதற்கு -அதற்கு சான்றாக இருப்பதற்கு இந்த மன்னிப்புக்கோரல் அமையும் என்பது அதிகமான முஸ்லிம்களின் கருத்து.**

ஜனாதிபதி பதவியை ஏற்று சில மாதங்களில் இந்த மன்னிப்புக் கோரலை விடுத்திருந்தால் இந்த சந்தேகம் வந்திருக்காது. முஸ்லிம்கள் அனைவரும் சந்தோசப்பட்டிருப்பார்கள். இருந்தாலும், இது நிராகரிக்கப்படக்கூடிய ஒன்றல்ல. கோத்தா முஸ்லிம்களுக்கு செய்த அநியாயத்தின் வரலாற்றுப் பதிவாக இருப்பதற்கு - அதற்கு சான்றாக இருப்பதற்கு இந்த மன்னிப்புக்கோரல் அமையும் என்பது அதிகமான முஸ்லிம்களின் கருத்து.

இந்த மன்னிப்பு கோரல் மட்டும் போதுமா? குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை இல்லையா என்ற கேள்வியும் முஸ்லிம்கள் தரப்பில் முன்வைக்கப்படுகிறது.

இந்தக் கட்டாய தகனம் மாத்திரமல்ல. இன்னும் எத்தனையோ அநியாயங்கள் மஹிந்தவினதும் கோத்தாவினதும் ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிராக செய்யப்பட்டுள்ளன. அத்தனைக்கும் இன்னும் நீதி கிடைக்கவில்லை. கிடைக்கபோவதுமில்லை. எல்லாவற்றையும் கடந்து செல்ல வேண்டியதுதான்.

# CIC Holdings 12% வளர்ச்சி



விவசாயத்தை மையமாகக் கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான **CIC Holdings PLC** நிறுவனம், மிதமான நிலையான **Macro** பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டில் உயர் மட்ட வருவாய் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது, பயிர்த் தீர்வுகள் (Crop Solutions), விவசாய உற்பத்தி, சுகாதாரம் மற்றும் தனிப்பட்ட பராமரிப்புத் துறைகள் ஆகியன 2024 நிதியாண்டில் CIC நிறுவனத்தின் வளர்ச்சியில் பிரதான பங்காற்றின.

அத்துடன், கடந்த ஆண்டுக்கான மொத்த குழு வருவாயில் பயிர் தீர்வுகள் வணிகம் முக்கிய பங்காளராக இருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். இதன்படி, CIC குழுமம் கடந்த ஆண்டில் ரூ.76.4 பில்லியனை ஒருங்கிணைந்த குழுவின் வருவாயாக பதிவு செய்துள்ளது.

இது கடந்த ஆண்டை விட 11.9% அதிகமாகும். மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் CIC குழுவானது வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.11 பில்லியனைப் பதிவு செய்துள்ளது, இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.6% வளர்ச்சியை எட்டியுள்ளது.

இதனிடையே, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மொத்த இலாபம் 15.4% ஆக குறைந்துள்ளதுடன், 3.7 பில்லியன் ரூபாவால் குறைந்துள்ளது.

அத்துடன், மொத்த இலாப வரம்பு 27% ஆக இருந்தது. கடந்த ஆண்டு இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில், 880 அடிப்படைப் புள்ளிகள் குறைந்துள்ளது. இதற்கு போட்டித் தன்மை மற்றும் அதிக உள்ளீட்டுச் செலவுகள் ஆகியவற்றால் ஏற்பட்ட அழுத்தம் தான் முக்கிய காரணமாகும்.

# SLIC ஜெனரல் மற்றும் RDB இணைவு



ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் கோர்பரேன் ஜெனரல் லிமிடெட் **(SLICGL)** நிறுவனம் பூரண காப்பீட்டை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு அதிக அணுகல் மற்றும் வசதியை உறுதி செய்வதற்காக அபிவிருத்தி நிதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட முன்னணி நிதி நிறுவனமான பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் **(RDB)** ஒரு மூலோபாய வங்கி காப்பீட்டு பங்காளித்துவத்தில் இணைந்துள்ளது.

இரு நிறுவனங்களினதும் உயர் மட்ட நிர்வாகப் பிரதிநிதிகளின் முன்னிலையில், அண்மையில் களனியில் உள்ள **RDB** தலைமை அலுவலகத்தில் இந்த சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் **(MOU)** கைச்சாத்திடப்பட்டது.

இந்த மைல்கல் நிகழ்வு, கிராமப்புற மக்களுக்கு அணுகக்கூடிய சிக்கன விலையில் காப்பீட்டு சேவைகளை வழங்கி கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க படியை குறிக்கிறது.

இந்த வங்கி காப்பீட்டு கூட்டாண்மை மூலம், **SLICGL**இன் பல்வேறு வகையான காப்பீட்டு சேவைகளை **RDB**இன் நாடு தழுவிய கிளை வலையமைப்பு மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

இன்றுவரை, நாடு முழுவதுமான 272 கிளைகள் ஊடாக **RDB** ஆனது ஆறு மில்லியனுக்கும் அதிகமான விசுவாசமான கணக்கு வைத்திருப்பவர்களைக் கொண்டுள்ளது. இப்போது வாடிக்கையாளர்கள் தங்கள் வழக்கமான வங்கிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் போது மோட்டார், தீ மற்றும் பொதுக் காப்பீட்டுக் கொள்கைகள் உள்ளிட்ட காப்பீடுகளை வசதியாகப் பெறலாம்.

# பங்குகள் ஒன்றிணைப்புக்கு அமானா வங்கி பங்குதாரர்கள் வரவேற்பு




கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு வழங்கியிருந்த அறிவித்தலின் பிரகாரம் பங்குகளை ஒன்றிணைக்கும் செயற்பாட்டுக்கு அனுமதி கிடைத்துள்ளதாக அமானா வங்கி அறிவித்துள்ளது.

பங்குதாரர்களின் பெறுமதியை மேம்படுத்துவது, வங்கியின் உறுதியான செயற்திறன் நிறைந்த நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றுக்கு பொருத்தமான செயற்பாடாக இது கருதப்பட்ட நிலையில், முதலீட்டாளர் சமூகத்தினால் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரூ. 6 பில்லியன் மூலதன உள்ளீட்டை அண்மையில் மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2023 ஆம் ஆண்டில் வங்கி பதிவு செய்திருந்த அதிசிறந்த நிதிப் பெறுபேறுகளைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தனது வளர்ச்சி மற்றும் மீண்டெழுந்தன்மையை தொடர்ந்திருந்தது.

முதல் காலாண்டில் வரிக்கு பிந்திய இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 91% இனால் உயர்ந்திருந்தது. முற்பணங்கள் 8% வளர்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், மக்களுக்கு நட்பான மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட வங்கியியல் வழிமுறைக்கான கேள்வியை பிரதிபலித்திருந்தது.

# சூழல் மற்றும் சமுத்திரங்கள் தினம் அனுடிப்பு





இலங்கையில் நிலைபேற்றியலில் முன்னோடியான **DFCC** வங்கி, இரு முக்கியமான முன்னெடுப்புக்களுடன் உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் உலக சமுத்திரங்கள் தினம் ஆகிய நிகழ்வுகளை அனுஷ்டித்துள்ளது.

முதலாவதாக வைக்காலில் சதுப்புநில மறுசீரமைப்புத் திட்டமும், அடுத்ததாக நக்கிள்ஸ் மலைத் தொடரில் ரிவர்ஸ்டனில் வன வளர்ப்புச் செயற்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீதான முதலீடுகளில் முன்னோடியாகச் செயற்பட்டு, 1990 களின் ஆரம்பத்தில் சுற்றுச்சூழல் நிலைபேற்றியல் மீதான தனது பயணத்தை ஆரம்பித்த **DFCC** வங்கியின் நீண்ட கால அர்ப்பணிப்பை இம்முயற்சிகள் பிரதிபலிக்கின்றன.

2030 ஆம் ஆண்டளவில் "பசுமை நிதி வழங்கலுக்கான வங்கியாக" (**The Bank for Green Finance**) மாறவேண்டும் என்ற குறிக்கோளுடன், **DFCC** வங்கி தொடர்ந்தும் முன்மாதிரியாகத் திகழ்ந்து வருவதுடன், பசுமை காலநிலை நிதிய அங்கீகாரத்தைப் (**Green Climate Fund - GCF**) பெற்ற இலங்கையின் முதல் நிறுவனமாக மாறியது.

வைக்கால் ஜின் ஓயா முகத்துவாரத்தில் சதுப்பு நில மறுசீரமைப்புச் செயற் திட்டமானது, 2024 ஜூன் 7 அன்று முன்னெடுக்கப்பட்டது. கரையோர சூழல்தொகுதிகளைப் பாதுகாப்பதற்காக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "சமுத்திரங்களுக்கு வாழ்வளிப்போம்" (**Life to Marine**) என்ற **DFCC** வங்கியின் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமே இந்த முயற்சி. இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், பிரதம நிறைவேற்று அதிகாரி திமால் பெரேரா, பிரதம மனிதவளங்கள் அதிகாரி பதும சுபசிங்க உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் பலர் நிகழ்வில் சமூகமளித்திருந்தனர். பல்வேறு கிளைகள் மற்றும் பணிப் பிரிவுகளிலிருந்தும் தன்னார்வத் தொண்டர்கள் பலரும் இந்நிகழ்வில் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றினர்.

# சர்வோதய டெவலப்மென்ட் பினான்ஸ் முதலாமிடம்



சர்வோதய டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம், **K Seeds Investments (Pvt) Ltd** வெளியிட்டுள்ள தரப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம், அதன் துறையில் முதலாவது ஸ்தானத்தில் திகழ்கின்ற நிறுவனமாக அங்கீகாரம் பெற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளது.

இலங்கையில் பங்குச்சந்தையில் நிரற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பான முழுமையான மதிப்பீட்டை மேற்கொண்டு, அவற்றின் நிதியியல் பலம் குறித்த விலைமதிப்பற்ற நுண்ணறிவை வழங்குவதில் **K Seeds Investments** புகழ்பெற்றுள்ளது.

காலாண்டு நிதியியல் அறிக்கைகளின் அடிப்படையில் வெளிவந்துள்ள சமீப அறிக்கை, நிறுவனங்களின் சொத்துத் தளத்தின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாக அவற்றை வகைப்படுத்தியுள்ளது. ரூபா 20 பில்லியனுக்கு கீழ்ப்பட்ட சொத்துத்தளத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களை உள்ளடக்கியுள்ள 4ஆம் பிரிவில் சர்வோதய டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி முன்னிலை பெற்றுள்ளது.

**K Seeds Investments** இடமிருந்து கிடைக்கப்பெற்ற அங்கீகாரம், சர்வோதய டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் தலைமைத்துவ அணியின் ஓயாத அர்ப்பணிப்பு மற்றும் மூலோபாய தூரநோக்கு ஆகியவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

# INSEEக்கு வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள்



இலங்கையின் முன்னணி மற்றும் ஒரேயொரு, முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட உள்நாட்டு சீமெந்து உற்பத்தி நிறுவனமான **INSEE Cement**, அண்மையில் இடம்பெற்ற **Green Industry Awards** 2024 விருதுகள் நிகழ்வில் தனது சாதனைகள் குறித்து பெருமையுடன் அறிவித்துள்ளது.

தாழ்ந்த காபன் மட்டத்துடன், காலநிலை நெகிழ்திறன் கொண்ட உற்பத்திக்காக வெள்ளி விருதையும், வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு மற்றும் பொறுப்புமிக்க வழியிலான உற்பத்திக்காக வெண்கல விருதையும் வென்று **INSEE Cement** கௌரவிக்கப்பட்டுள்ளது.

ஜுன் 23 ஆம் திகதி **BMICH** இல் இடம்பெற்ற நிலைபேணத்தக்க கைத்தொழில் அபிவிருத்திக்கான பசுமை கைத்தொழில் முயற்சிகள் தொடர்பான 1வது சர்வதேச மாநாட்டின் போது கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையால் இவ்விருதுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

**INSEE Cement** நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜான் குனிக் அவர்கள் நிறுவனத்தின் நிலைபேற்றியல் சார்ந்த பயணத்தில் இவ்விருதுகளின் முக்கியத்துவம் குறித்து கருத்து வெளியிடுகையில், "**INSEE Cement** நிறுவனத்தைப் பொறுத்தவரையில், எமது செயல்பாடுகள் அனைத்திலுமே நிலைபேற்றியல் என்பது மையமாகக் காணப்படுகின்றது. சூழல் நேய நடைமுறைகளை ஊக்குவித்து மற்றும் பொறுப்புள்ள வர்த்தக நிறுவனமாக செயற்படுவதில் எமது முயற்சிகளை இவ்விருதுகள் நிரூபிக்கின்றன என்று குறிப்பிட்டார்.

# தங்கக் கடன் மத்தியநிலையங்கள்




கொழும்புக்கு வெளியில் தங்கக் கடனுக்கான அதிக தேவைக்கு தீர்வாக, பெலியத்த, குருநாகல் - மெட்ரோ மற்றும் குளியாபிட்டிய நகரங்களில் அமைந்துள்ள **HNB FINANCE PLC** கிளை வளாகத்தை மையமாகக் கொண்டு 3 புதிய தங்கக் கடன் மத்திய நிலையங்கள் அண்மையில் திறக்கப்பட்டன.

இதன்படி, **HNB FINANCE** தங்கக் கடன் நிலையத்தின் பெலியத்த தங்கக் கடன் மத்திய நிலையம் இல. 51/1 மாத்தறை வீதி பெலியத்த, பெலியத்த நகரத்திலும், புதிய குருநாகல் - மெட்ரோ கிளை தங்கக் கடன் நிலையம் இல. 155 புத்தளம் வீதி குருநாகலிலும் மற்றும் குளியாப்பிட்டிய கிளை தங்கக் கடன் மத்திய நிலையம் இல. 355, மாதம்பே வீதி குளியாப்பிட்டிய ஆகிய இடங்களிலும் திறக்கப்பட்டுள்ளன.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட **HNB FINANCE** பெலியத்த தங்கக் கடன் சேவை மத்திய நிலையத்தின் திறப்பு நிகழ்வு நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளரும் கடன் சேவைகளின் தலைவருமான திரு. இந்துனில் ஜயவர்தன தலைமையில் நடைபெற்றதுடன், குருநாகல் - மெட்ரோ மற்றும் குளியாபிட்டிய புதிய தங்கக் கடன் மத்திய நிலையங்கள் கிளை வலையமைப்புத் தலைவரின் உதவிப் பொது முகாமையாளர் திரு. பதும் சம்பத் குரே மற்றும் உதவிப் பொது முகாமையாளர் - பிரிவுத் தலைவர் - தயாரிப்பு வணிக முகாமைத்துவப் பொது முகாமையாளர் லக்ஷ்மன் எராஜ் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

# தேயிலையின் எதிர்காலம்: தொடர்பில் கூட்டம்



சர்வதேச தரநிர்ணய அமைப்பின் (ISO) தேயிலை குறித்த தொழில்நுட்பக் குழுவின் (ISO TC 34/ SC 8) 30ஆவது பொதுக்குழு கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றதுடன், 10 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த தேசிய தரநிர்ணய அமைப்புகளைப் (NSBs) பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கூடிய BESPA-FOOD திட்டத்தின் ஆதரவுடன் இலங்கைதரநிர்ணயநிறுவனத்தினால் (SLSI) இவ்விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதுமாத்திரமின்றி, ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் (UNIDO) ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டமானது, COVID-19 தொற்றுநோய்க்குப் பிறகு நடைபெறுகின்ற முதலாவது நேருக்கு நேர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகெங்கிலும் உள்ள உறுப்பு நாடுகளுக்கு தேயிலைத் துறையைச் சார்ந்த புதிய தரநிலைகள் மற்றும் ஆராய்ச்சி பற்றி விவாதிக்கவும், வளர்ச்சி முன்னேற்றத்திற்கு ஏற்ப இருக்கும் தரநிலைகளை மேம்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கின்ற ISO/TC 34/SC 8 கூட்டமானது அந்தந்த நாடுகளின் சந்தை போக்குகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்ப செயல்படவும் வாய்ப்பளிக்கிறது..

# புலியைப் பாதுகாக்கும் LOLC




ஒகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி தேசிய பாந்தெரா பார்டஸ் புலி தினத்தை கொண்டாடும் வகையில், LOLC ஹோல்டிங்ஸ், வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கத்துடன் ((WNPS)) இணைந்து, இலங்கை பாந்தெரா பார்டஸ் புலியை பாதுகாப்பதற்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை மேலும் மேம்படுத்த பல புதிய முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த விரிவுபடுத்தப்பட்ட முயற்சியின் ஒரு பகுதியாக, LOLC ஆனது 'இலங்கைச்பாந்தெராபார்டஸ் புலியைக் காப்பாற்று' என்ற தொனிப பொருளின் கீழ் புதிய இலட்சினையை அறிமுகப்படுத்தியுள்ளது.

பாதுகாவலர்கள் மற்றும் பொதுமக்கள் இருவரையும் எதிரொலிக்கும் வகையில், இலட்சினையில் பாந்தெரா பார்டஸ் புலியின் தூய்மையான மற்றும் சக்திவாய்ந்த உருவம் இடம்பெற்றுள்ளது,

இலங்கை பாந்தெரா பார்டஸ் புலி மற்றும் அதன் வாழ்விடத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது, இது பெருமை மற்றும் பாதுகாப்பு முயற்சிகளுக்கு ஆதரவை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் உள்ளது.

2022 பெப்ரவரி மாதம் முதல், டுழுடுஊ மற்றும் WNPS ஆகியவை இலங்கை பாந்தெரா பார்டஸ் புலி எதிர்கொள்ளும் எண்ணற்ற சவால்களை எதிர்கொள்ள விரிவான 5 ஆண்டு திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

# பொலிஸாருக்கு அறிவுறுத்தல் பலகைகள் நன்கொடை



சியபத பினான்ஸ் பிஎல்சி அதன் வருடாந்த சமூகப் பொறுப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சமீபத்தில் முடிவடைந்த 'தெவிநுவர எசல பெரஹெர 2024'க்கு இணங்க, கந்தர பொலிஸாருக்கு "No Parking" அறிவுறுத்தல் பலகைகளை நன்கொடையாக வழங்கியது.

விஷ்ணு தெய்வத்தை வணங்கிக் கொண்டாடப்படும வருடாந்தத் திருவிழாவான எசல பெரஹரவைக் கண்டுகளிப்பதற்காக நாடு முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான இந்து மற்றும் பௌத்த மக்கள், அங்கு வருகை தருகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும், தெவிநுவர எசல பெரஹரா, நடனம், இசை, வண்ணங்கள், யானைகள் அணிவகுப்பு என நமது தேசத்திற்கு தனித்துவமான பாரம்பரிய நிகழ்வுகளால் தெருக்களை அலங்கரிக்கிறது.

# ஊவா தொழில்முயற்சி வெற்றியாளர்களை கௌரவித்த தீவா




Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து உநஅயள ஊழளெரஅநச டீசயனெள நிறுவனத்தின் முதன்மையான சலவை பராமரிப்பு வர்த்தகநாமமான தீவாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தீவா கரத்திற்கு வலிமை' தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, இன்றைய பொருளாதார சூழலில் தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு அவசியமான அறிவு, திறன் மற்றும் நம்பிக்கையுடன் பெண்களை தொடர்ச்சியாக வலுவூட்டி வருகிறது.

ஊவா மாகாணத்தின் வெலிமடையில் நடைபெற்ற தீவா கரத்திற்கு வலிமை தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் வெற்றியாளர்களைக் கொண்டாடும் பிரத்தியேக நிகழ்வை தீவா அண்மையில் நடாத்தியிருந்தது.

'தீவாகரத்திற்குவலிமை'தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, தீவா வர்த்தகநாமம் கொண்டுள்ள நோக்கத்தின் ஒரு அம்சமாகும்.

இது பெண் தொழில்முனைவோருக்கு நிபுணத்துவ வழிகாட்டல், வணிக ரீதியிலான புத்திசாலித்தனம், திறன்கள், திறமைகளைஏற்படுத்தும் முதன்மை நோக்கத்துடன் திட்டமிடப்பட்டுள்ளது. பெண் தொழில்முனைவோருக்குத் தேவையான அறிவு, திறன், நம்பிக்கையை வழங்குவதன் மூலம் அவர்களின் வணிக செயற்பாடுகளை நிர்வகித்தல் மற்றும் மூலோபாய ரீதியாக அதனை வழிநடத்திச் செல்லல் ஆகியவற்றிற்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த திட்டம் சிறப்பாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

# கண்கவர் காட்சிகளை வழங்கும் Samsung's Neo QLED 8K




குறிப்பாக, மிகப் பெரிய தொலைக்காட்சிகள் தற்போது சந்தையில் அதிகளவில் காணப்பட்டாலும், பெரிய திரை அனுபவத்தை வழங்குவதில் வியக்க வைக்கும் மூன்று முக்கிய அம்சங்களுடன் Samsung முன்னணியில் உள்ளது.

பெரிய தொலைக்காட்சித் திரையானது பொதுவாக ஒரு நல்ல விடயமாகும். காலப்போக்கில், பெரிய தொலைக்காட்சிகள் அதிகம் விரும்பப்படுகின்றதாக மாறியது மட்டுமல்லாமல், நுகர்வோர்மத்தியில் மிகவும் பிரபலமாகிவிட்டன.

திரைப்படத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், இப்போது நமக்குப் பிடித்த கதைகளை மிகவும் யதார்த்தமான முறையில் திரையில் உயிர்ப்பிக்கின்றதால், அவை பார்வையாளர்களை அவர்கள் பார்க்கும் உள்ளடக்கத்தில் முழுமையாக மூழ்கவைக்கின்றன.

Samsung's Neo QLED 8K தொலைக்காட்சியானது மிகப் பெரிய திரையை கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், அதிநவீன தொழில்நுட்பங்களின் மூலம் மிகையான உணர்வியல் பார்வை அனுபவத்தையும் வழங்குகிறது.

8மு தெளிவுத்திறன் கொண்ட பெரிய தொலைக்காட்சிகளின் முழு திறனையும் திறக்கிறது.

தொலைக்காட்சி திரைகள் அளவில் பெரிதாகும்போது, காட்சியின் தரத்தைப் பராமரிப்பது சவாலான விடயமாகும். ஆனால் Samsung's Neo QLED 8K தொலைக்காட்சிகளுடன் ஒப்பிடும்போது நான்கு மடங்கு அதிக Pixels வழங்குவதன் மூலம் இதை நிவர்த்தி செய்கிறது.

இதனால் மிக நெருக்கமாக அமைக்கப்பட்ட ஆனைெ டுநுனுள மற்றும் மேம்படுத்தப்பட்ட செயலாக்கத்துடன் உயர்தர காட்சித்தரம் கிடைக்கின்றது. இதனால் மிகப்பெரிய திரைகளிலும் கூர்மையான, உயிரோட்டமான காட்சிகளை வழங்குவது உறுதிசெய்யப்படுகின்றது.

# டேர்டன்ஸ் வைத்தியசாலைக்கு JCI மீள் அங்கீகாரம்

டேர்டன்ஸ் வைத்தியசாலை, 3வது தடவையாகவும் Joint Commission International> USA (JCI) மீள்அங்கீகாரத்தைப் பெற்று சுகாதாரத் துறையில் முன்னிலையாளர் என்ற தனது ஸ்தானத்தை மறுபடியும் உறுதிப்படுத்தியுள்ளது.

நோயாளர் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் மகத்துவத்தின் மீது டேர்டன்ஸ் வைத்தியசாலையின் ஓயாத அர்ப்பணிப்பின் அடையாளமாக மாறியுள்ள இச்சாதனையானது, மருத்துவ நோக்கத்திற்கான சுற்றுலாத்துறைக்கு உகந்த நாடாக இலங்கையை பிரபலப்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

இலங்கையில் சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டு வருகின்ற நிலையில், டேர்டன்ஸ்வைத்தியசாலைபோன்ற ஸ்தாபனங்களின் வழிநடத்தலுடன் வலுவான, கட்டுபடியான மற்றும் நம்பகமான சுகாதாரப் பராமரிப்புத் துறை காரணமாக இந்நாடு மருத்துவ நோக்கத்திற்கான சுற்றுலாத்துறையில் வளர்ச்சி கண்டு வருகின்றது..

நோயாளர் கவனிப்பு, பாதுகாப்பு நெறிமுறைகள், வைத்தியசாலை செயல்பாடுகள் மற்றும் நிர்வாக ஆட்சி போன்ற அம்சங்களை உள்ளடக்கி, வைத்தியசாலையின் நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகள் தொடர்புபட்ட 1,200 க்கும் மேற்பட்ட கூறுகளை மதிப்பீடு செய்வதில் வல்லுனர்களைக் கொண்ட அணியால் விரிவான மதிப்பீடு செய்யப்பட்டே JCI மீள்அங்கீகார செயல்பாடு இடம்பெறுகின்றது.

